முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

OS.NO.28/2024 (DW1)

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | : | 1 |
| பெயர் | : | இருதயராஜ் |
| தகப்பனார் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026-ம் ஆண்டு **பிப்ரவரி** மாதம் 12-ம் நாள் **வியாழக்கிழமை** திருமதி.K.அறிவொளி.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை:**

நான் இந்த வழக்கில் பிரதிவாதியாவேன். எனது தரப்பு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 2010 ம் வருடம் ஜீன் மாதம் 4 ம் தேதி வாதியின் பெயரில் இருந்து, பிரதிவாதியின் பரமக்குடி ICICI உள்ள வங்கி கணக்கில் மேற்படி ரூ.10,00,000/- ம் செக் மூலம் பரிமாற்றம் செய்யப்பட்டது. அதனை காண்பிக்கக் கூடிய வங்கி ஸ்டேட்மெண்ட் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், புலிக்கண்மாய் கிராமம், சர்வே எண்கள். 94/12, 95/5, 95/7A, 94/11, 95/6, 95/B1A ஆகிய ரூ.20 லட்சம் (அப்போதைய மதிப்பில்) ஆகிய சொத்துக்களை உள்ளடக்கி பதியப்படாத ஈடு கடன் பத்திரம் ஒன்றை பிரதிவாதி, வாதியிடம் ஏற்படுத்திக் கொண்டார். அந்த பதிவு செய்யப்படாத ஈடுகடன் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதி, பிரதிவாதி மற்றும் வாதியின் மைத்துனர் அர்ஜீனன் ஆகியோர் சேர்ந்து வாங்கப்பட்ட சொத்துக்களில் பிரதிவாதியின் பங்கினையும், வாதியின் மைத்துனர்

பங்கினையும் கடந்த 02.01.2013 ம் தேதி காளையார்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 10/2013 என்ற எண்ணில் எழுதி வாங்கிக் கொண்டார். அதை காண்பிக்கக்கூடி வில்லங்கச் சான்று கணினியின் நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பிரதிவாதியால் காளையார்கோவில் மாதா நகரில் தனித்து வாங்கப்பட்ட பிளாட் எண்.45 என்ற சொத்தையும், மேற்படி கடன் தொகைக்காக கடந்த 06.06.2013 ம் தேதி காளையார்கோவில் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.2304/2013 என்ற எண்ணில் வாதி எழுதி வாங்கிக் கொண்டார். அதனை காண்பிக்கக் கூடிய வில்லங்க சான்றிதழ் கணினியின் நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.12 17:33:09 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை